கருக்கம்

ஆதி திராவிடர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (வன்கொடுமை தடுப்பு) விதிகள் 1995–இன் படி பாதிக்கப்பட்டவர் / அவரைச் சார்ந்தோர் மற்றும் சாட்சிகளுக்கு பயணப்படி மற்றும் தினப்படிகள் காவல் துறை மூலம் வழங்குதல் – புதிய கணக்குத் தலைப்பு உருவாக்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடு.தடு(1))துறை

அரசாணை (நிலை) எண்: 32 நாள்: 27.05.2016.

வைகாசி 14, திருவள்ளுவராண்டு 2047

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.118, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 25.07.2005.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநர் கடிதம் ந.க.எண்.எச்4/ 20658/13 நாள் 7.8.13.

3. அரசு ஆணை (ப) எண்.48/நிதி (உள்1)துறை நாள் 20.02.2016.

---

ஆணை:–

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமையால் பாதிக்கப்படும்போது, பாதிக்கப்பட்டவர் / அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கில் சாட்சிகளை விசாரணைக்காக அழைக்கப்படும்போது அவர்களுக்கு பயணப்படி / உணவுப்படி / தங்கும் கட்டணம் / கைச்செலவு / தினப்படிகள் வழங்கிட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995–விதி எண்.11–இல் வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில், 3.11.2004 நாளிட்ட நிதித் (படிகள்) துறையின் அரசாணை (நிலை) எண்.551–இல் மாற்றியமைக்கப்பட்ட இரண்டாம் நிலைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி மற்றும் மருத்துவ செலவினத்தையும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கும், சாட்சிகளுக்கும் அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில், 29.5.15 அன்று சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பாக நடைபெற்ற கூட்ட நிகழ்ச்சிப் பதிவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில், வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர், அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகள் ஆகியோருக்கு பயணப்படி, உணவுப்படி மற்றும் தினப்படி ஆகியவற்றை

தற்போதுள்ள நடைமுறைகளின்படி மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்படுவதை மாற்றி மேற்கண்ட சாட்சிகளுக்கு உடனடியாக பயணப்படி உள்ளிட்ட இதர தொகைகள் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, தேசியத் தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின், தமிழக வருகையை முன்னிட்டு நடந்த முதற்கட்ட ஆய்வுக் கூட்டத்திலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில், வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர், அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகளுக்கு பயணப்படி, உணவுப்படி, தினப்படி ஆகியவற்றை காவல் துறை மூலம் வழங்கலாம் என தலைமை செயலர் அறிவுறுத்தினார்.

3. மேலே பத்தி இரண்டில் காணும் விவரங்கள் அரசால் ஆராயப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில், வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர், அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகள் ஆகியோருக்கு பயணப்படி, உணவுப்படி, மற்றும் தினப்படி ஆகியவற்றை தற்போதுள்ள நடைமுறைகளின்படி மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்படுவதை மாற்றி, அனைத்து மாநகர காவல் துறை ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் மூலம் வழங்கப்படவேண்டும்.

(ii) மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது.

(iii) வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர், அவரைச் சார்ந்தவர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகள் ஆகியோருக்கு வழங்கப்படும் பயணப்படி, உணவுப்படி மற்றும் தினப்படி ஆகியவற்றை உயர்த்தி வழங்கக்கோரும் செயற்குறிப்பு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்குப் பின்னர் பரிசீலிக்கப்படும்.

(iv) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர், அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகளுக்கு வழங்கப்படும் பயணப்படி, உணவுப்படி மற்றும் தினப்படி ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கையினை, கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) மூலமாக, அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தின் ஆய்விற்கு சமர்ப்பிக்குமாறும், அனைத்து மாநகர காவல்துறை ஆணையர்கள் / அனைத்து மாவட்ட கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(v) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில், வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர், அவரைச் சார்ந்தோர் மற்றும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் சாட்சிகள் ஆகியோருக்கு பயணப்படி, உணவுப்படி மற்றும் தினப்படி ஆகியன வழங்கப்பட்ட விவரங்கள், மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, கூட்ட செயல்முறைகளில் இடம் பெறுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. மேலே பத்தி 3(ii)-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 01 மறுவாழ்வு 200 – ஏனைய துயர் தணிப்பு நடவடிக்கைகள் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – VI மாநில மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் UB – கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு நிதி உதவி 60– அரசு சார்பற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி, நாட்படி (DPC: 2235-01-200-UB-6000)

5. மேலே பத்தி 3(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2015–2016ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை காவல்துறை துணைத் தலைவர், சமூக நீதி மற்றும் மனித உரிமை அவர்கள் பெற்று வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு காவல் துறை துணைத் தலைவர், சமூக நீதி மற்றும் மனித உரிமை அவர்கள் மதிப்பீடு, நேர் செய்தல் மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.12763/2016, நாள்: 02.03.2016–இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ப.அண்ணாமலை
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
கூடுதல் காவல் துறை இயக்குநர்
(சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்), சென்னை–4.
அனைத்து மாநகர காவல் துறை ஆணையர்கள்.
(சென்னை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை)
அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள்.

<u>நகல்:</u>
உயர்நீதி மன்றப் பதிவாளர்,
சென்னை உயர்நீதி மன்றம், சென்னை–104.
முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை–9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
நிதி(ஆதி(ம)பந) /உள்–I/வரவு செலவு–II) துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு–1/ஆதிந5) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

எல். மகேஸ்வரி
1/6/16
பிரிவு அலுவலர்.